செய்வதற்கு ஆணையிடப்பட்டது. அதற்குப் பிறகு இந்தச் சாலை, தேசிய நெடுஞ்சாலை 7, தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுமம் (National Highways Authority of India) என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த நிறுவனத்தின் மூலம் இப்போது L & T RAMBOL என்ற நிறுவனத்தினிடத்திலே ஆய்வு செய்வதற்காக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறும் என்பதை மாண்புமிகு மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நேற்றுகூட நாடாளுமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 591, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

591—

சாலையைச் செப்பனிடுதல்

***28722**—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவோணம் ஒன்றியம், ஒரத்தநாடு உட்கோட்டம், ஊரணிபுரம்-அண்ணாபுரம் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் ஏற்படும் நொடிகளை அவ்வப்பொழுது சீர்செய்து, போக்குவரத்திற்கு ஏற்றவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரணிபுரத்திலிருந்து தென்கரை வரை, அண்ணாபுரம் வரை செல்கிற சாலை 12 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அது மிகவும் பழுதாகி இருக்கிறது. அவ்வப்போது செப்பனிடப்படுகிறதெனினும், மழைக்காலம் வருகின்றபோது அவை மறுபடியும் பழுதாகிவிடுகின்றன. அதேபோல, ஒரத்தநாடு உபகோட்டம் என்பது 380 கிலோ மீட்டர் கொண்டிருக்கிற பெரிய உபகோட்டமாக இருக்கிறது. ஒவ்வொரு

2000 மே 11]

உபகோட்டத்திற்கும் ஒதுக்குகின்ற தொகையைவிட, ஒரத்தநாட்டிற்குப் பொதுவாகக் கூடுதலாக ஒதுக்கப்படுவதில்லை. அங்கே ஆற்றோரச் சாலை இருக்கிறது. ஆற்றில் தண்ணீர் போகிறபோது ஆற்றின் ஓரம் அரிக்கப்பட்டு அதுவும் குறுகலாகிறது. மழைக் காலங்களில் ஆற்று ஓரங்களிலே மழை பெய்கிற காலத்திலே கரையும் குறுகலாகிறது. குறுகலாகிறபோது இந்த நெடுஞ்சாலையும் குறுகலாகி, பஸ் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாகவும், ஆபத்தாகவும் இருக்கிறது. இந்தச் சாலையை மட்டும் அல்ல; வெட்டிக்காட்டிலிருந்து கோயிலூர் வரை செல்கின்ற 15 கிலோ மீட்டர் சாலையும் ஆற்றோரமாக ஜி.ஏ. கேனாலிலே செல்கிற சாலை என்பதனாலே இவற்றைச் செப்பனிட்டுத் தருவதை அரசு மிக முக்கியமானதாகக் கருத வேண்டும். ஆகையினாலே, இதற்கு ஒதுக்கீடு செய்து அந்தச் சாலைகளைச் செப்பனிட்டு, பெரிதாக்கித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல இந்தச் சாலையின் நீளம் 12 கிலோமீட்டர் அல்ல. 13.2 கிலோ மீட்டர் தொலைவு இருக்கிறது. இந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கோ அல்லது புருவங்களைச் சரிப்படுத்துவதற்கோகூட பக்கத்திலே மண் எடுக்க முடியவில்லை. ஆகவே, புருவங்களைச் சரிபடுத்துவதற்குக்கூட வெளியேயிருந்து மண் கொண்டுவந்து, அந்தச் சாலையைச் சரிப்படுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அகலப்படுத்துவதிலேயும் சிக்கல் இருக்கிறது. என்றாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையிலே அறிவித்து, இதர மாவட்டச் சாலைகளை மேம்படுத்துவதற்காக 400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்களே, அந்தத் திட்டத்தில் இந்தச் சாலையை மேம்படுத்துவதற்கு 11.90 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அது ஒப்புதலுக்காக அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் ஒப்புதல் கிடைக்கும். இந்த 11.90 இலட்சம் ரூபாயில் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 592, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.